DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 95/2021

Prosecution side witness for P.W.9

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கணேசன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

Accused is Present.

முதல்விசாரணை:–

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், உசரத்து குடியிருப்பு பிரமாணவிளை மேலத்தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன துரைராஜ் என்பவரை தெரியும். இறந்துபோன 3 பிள்ளைகள். துரைராஜ்க்கு 2 பையன்கள் உண்டு. ஒரு பெண் குழந்தை உண். ஆஜர் எதிரியை தெரியும். அவர் துரைராஜின் மகன் ஆவார். அவரது மனைவியை தெரியும். மற்றொரு மகன் ஜெகன் இறந்துபோய்விட்டார். இந்த வழக்கு சம்மந்தமாக என்னதெரியும் என்று கேட்டால் கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊர் முத்துமாலை அம்மன்கோவிலில் கூழ் ஊற்றிக்கொண்டிருந்தோம். அப்போது 2 போலீசார் துரை இறந்துபோனது வழக்கு சம்மந்தமாக எங்கள் ஊருக்கு வந்தார்கள். வந்தவர்கள் சாட்சிக்காக என்னிடம் கையெழுத்து கேட்டார்கள், நான் போட்டுக்கொடுத்தேன். எதிரி சிவா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். எதிரி சிவா என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ 9** ஆகும். எதிரி ஜெகன் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ 10** ஆகும். எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்பேரில் எதிரி வீட்டிலிருந்து எடுத்துக்கொடுத்ததாக உள்ள பொருட்களை கைப்பற்றிய அத்தாட்சிகளில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். எதிரி சிவா

என்பவர் எடுத்துக்கொடுத்த பொருளை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ–11** ஆகும். எதிரி ஜெகன் என்பவர் எடுத்துக்கொடுத்த பொருளை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ–12** ஆகும். எதிரிகளை கைது செய்யும்போதோ, அவர்கள் பொருட்களை எடுத்து கொடுக்கும்போதோ நான் உடன் இருக்கவில்லை. நான் சென்னையிலிருந்து அன்றுதான் ஊருக்கு வந்தேன். அதனால் எனக்கு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கும்போது என்னை விசாரிக்கவில்லை. வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரித்தார்கள் என்றும், போலீசார் விசாரணையின்போது, கடந்த 17.08.2020 ஆம் தேதி காலை 6.00 மணிக்கு தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பை கவனிக்கும் சாத்தான்குளம் ஆய்வாளர் அவர்கள் கேட்டுக்கொண்டதன்பேரில் நானும், அய்யாதுரை நாடார் மகன் சுடலைமணி என்பவரும் பிரமாணவிளை மேலத்தெருவில் உள்ள செல்வம் என்பவரது வீட்டிற்கு சென்றபோது அந்த வீட்டினுள் மறைந்து இருந்த ஆஜர் எதிரி சிவா மற்றும் அவரது அண்ணன் ஜெகன் ஆகியோர்களை போலீசார் கைது செய்து எங்கள் முன்னிலையில் விசாரித்தார்கள் என்றும், அவ்வாறு விசாரிக்கும்போது அவர் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அதில் தன் தந்தையாரை கொலை செய்த விவரத்தை தெரிவித்துவிட்டு தன் தகப்பனாரை கொலை செய்ய பயன்படுத்திய உடை மர கம்பை தன் வீட்டின் முன்பு அடுக்கி வைத்துள்ள உடை முள் விறகுகளுக்கு இடையிலிருந்து எதிரிகள் எடுத்து ஆஜர் செய்தார்கள் என்றும், அந்த கம்புகளை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த அத்தாட்சிகளில்தான் நானும், சுடலைமணியும் கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும், எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எதிரிகள் சொல்ல சொல்ல ஆய்வாளர் எங்கள் முன்னிலையில் மடிக்கணினியில் டைப் செய்தார்கள் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலங்களிலும் நானும், சுடலைமணியும் சாட்சியாக கையெழுத்து செய்து கொடுத்தோம் என்றும் போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு

தற்போது எதிரிகள் எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்பதாலும், அவர்களது அம்மாவை எனக்கு நன்கு தெரியும் என்பதாலும் அவரது அம்மா கேட்டுக்கொண்டதன்பேரில் எதிரிகளை காப்பாற்ற வேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.21 19:58:07 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 95/2021

Prosecution side witness for P.W.10

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ஷாஜன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

Accused is Present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், மண்டைகாடு காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடம் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 58 ஆகும். தட்டார்மடம் காவல்நிலைய குற்ற எண்.175/2020 சட்டபிரிவு 302 இதச வழக்கில் 16.08.2020 ஆம் தேதி 20.00 மணிக்கு தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன உசரத்து குடியிருப்பை சேர்ந்த துரைராஜ் என்பவரின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணையை துரைராஜின் வீட்டின் முத்தத்தில் வைத்து முடித்து துரைராஜின் இறப்பின் உண்மையான காரணத்தை மருத்துவ ரீதியாக அறியும்பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி பிரேத வைப்பறையில் பாதுகாப்பில் வைக்க வேண்டுகோள் கடிதத்தை பெற்று தூத்துக்குடி அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் பிரேத வைப்பறையில் மருத்துவ அதிகாரியிடம் ஆஜர் செய்து பிரேத வைப்பறையில் வைத்தேன்.

பின்னர் மறுநாள் 17.08.2020 ஆம் தேதி அதே தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் அவர்கள் இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன உசரத்து குடியிருப்பை சேர்ந்த துரைராஜ் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்யவேண்டி கொடுத்த பிரேத பரிசோதனை வேண்டுகோள்

கடிதத்தை பெற்று தூத்துக்குடி அரசுமருத்துவமனை சென்று விண்ணப்பகடிதத்தை மருத்துவ அதிகாரியிடம் ஆஜர் செய்து பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உடன் இருந்து, பிரேத பரிசோதனை முடிந்தபின் துரைராஜின் பிரேதத்தை அவருடைய குலவழக்கப்படி நல்லடக்கம் செய்ய அவரது உறவினர்கள் வசம் ஒப்படைத்தும், பின்பு பிரேத பரிசோதனையின்போது மருத்துவரால் பிரேதத்திலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரத்தம்பட்ட நீலம், வெள்ளை, கருப்பு கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்றையும், இரத்தம்பட்ட மஞ்சள் கலர் அரைக்கை சட்டை வெட்டியெடுக்கப்பட்டது ஒன்றையும், இரத்தம்பட்ட வெட்டியெடுக்கப்பட்ட மஞ்சள் கலர் பனியன் ஒன்றையும், இரத்தம்பட்ட பிரவுன் கலர் Poomax டவுசர் மாடல் ஜட்டி ஒன்றையும் மற்றும் மாதிரிக்கு சேமித்து வைக்கப்பட்ட இரத்தமுள்ள பிளாஸ்டிக் டப்பா ஒன்றையும் மருத்துவரிடமிருந்து பெற்று நிலையம் வந்து ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்து அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக எனக்கு பணிஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 13** ஆகும். ஆய்வாளரிடம் ஒப்படைத்த பொருட்களை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் இரத்தம்பட்ட நீலம், வெள்ளை, கருப்பு கலர் கட்டம்போட்ட சாரம் ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண். 5ல் உள்ளது) அ.சா.பொ.3 தான், இரத்தம்பட்ட மஞ்சள் கலர் அரைக்கை சட்டை வெட்டியெடுக்கப்பட்டது ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண். 6ல் உள்ளது) அ.சா.பொ.4 தான், இரத்தம்பட்ட வெட்டியெடுக்கப்பட்ட மஞ்சள் கலர் பனியன் ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண். 7ல் உள்ளது) **அ.சா.பொ.7** ஆகும். இரத்தம்பட்ட பிரவுன் கலர் Poomax டவுசர் மாடல் ஜட்டி ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண். 8ல் உள்ளது) **அ.சா.பொ.8** ஆகும். மற்றும் மாதிரிக்கு சேமித்து வைக்கப்பட்ட இரத்தமுள்ள பிளாஸ்டிக் டப்பா ஒன்று (சொத்துப்பட்டியல் வரிசை எண். 9ல் உள்ளது) **அ.சா.பொ.9** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த பணியும் மேற்கொள்ளவில்லை என்றாலும், நான் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மருத்துவர் என்னிடம் ஒப்படைத்த சான்றுபொருட்கள் அனைத்தும் மருத்துவர் சொன்னதன்அடிப்படையில்தான் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல.

எனக்கு நேரடியாக தெரியும் என்று எனது வாக்குமூலத்தில் தெரிவிக்கவில்லை என்றுசொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.21 19:58:14 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 95/2021

Prosecution side witness for P.W.11

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜேஷ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

Accused is Present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், ஆலம்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். இதற்கு முன்பு தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடம் காவல்நிலையத்தில் 2ம்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 4829 ஆகும். தட்டார்மடம் காவல்நிலைய குற்ற எண்.175/2020 சட்டபிரிவு 302 இதச வழக்கில் கொலையுண்டு இறந்துபோன உசரத்து குடியிருப்பை சேர்ந்த துரைராஜ் என்பவரின் பிரேத விசாரணை அறிக்கையை 17.08.2020 ஆம் தேதி 14.00 மணிக்கு தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் பொறுப்பு சாத்தான்குளம் காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து பெற்று சாத்தான்குளம் பொறுப்பு ஸ்ரீவைகுண்டம் நீதித்துறை நடுவர் அவர்களிடம் நேரில் ஒப்படைத்து ஒப்பம் பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். அது சம்மந்தமாக பணி ஒதுக்கப்பட்டு எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–14** ஆகும்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த பணியும் மேற்கொள்ளவில்லை என்றாலும், நான் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

__மறுவிசாரணை இல்லை.__

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.21 19:58:21 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C. No. 95/2021

Prosecution side witness for P.W.12

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சுதன்** | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **21.01.2026**

Accused is Present.

<u>முதல்விசாரணை:—</u>

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம், ஆயுதப்படையில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு தூத்துக்குடி மாவட்டம், தட்டார்மடம் காவல்நிலையத்தில் 2ம்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 4626 ஆகும்.தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் அவர்களின் உத்தரவுப்படி 04.09.2020 அன்று காலை 10.00 மணிக்கு கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் சாத்தான்குளம் நீதிமன்றத்தில் அறிக்கை செய்து நீதிமன்ற உத்தரவு பிரகாரம் 17.08.2020 ஆம் தேதி தூத்துக்குடி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் துரைராஜ் என்பவரின் பிரேத பரிசோதனையின்போது மருத்துவரால் சேகரித்து வைக்கப்பட்டிருந்த உடல் உள்ளுறுப்புகளை இரசாயன பரிசோதனை செய்யவேண்டி 04.09.2020 அன்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து ரசீது எண்.TIN/TOX.H/1917/2020 பெற்றேன். அதற்காக ஆய்வாளரால் கொடுக்கப்பட்ட வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ— 15** ஆகும். அதன்படி 04.09.2020 ஆம் தேதி ஒப்படைத்து ஒப்பம் பெற்றேன்.

மேலும் அன்றையதினமே அரசுமருத்துவகல்லூரி மருத்துவமனையில் இரத்தமாதிரிகளையும், இரத்தம்படிந்த தடய சொத்துக்களையும் இரசாயன பகுப்பாய்வு செய்யவேண்டி ஆய்வாளர் கொடுதத வேண்டுகோள் கடிதத்தை கனம் நீதித்துறை நடுவர் சாத்தான்குளம் அவர்களிடம் கொடுத்தும், அப்பால் நீதிமன்ற உத்தரவு

பிரகாரம் உத்தரவு பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து ஒப்பம் பெற்றேன். அதற்கான வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 16** ஆகும். அதற்கான நீதிமன்ற உத்தரவு கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 17** ஆகும்.

பின்னர் 08.09.2020 அன்று தடய சொத்துக்களை இரசாயன பகுப்பாய்வு செய்யவேண்டி நீதிமன்றத்திலிருந்து பெற்று நீதிமன்ற உத்தரவு பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து ஒப்பம் பெற்று நீதிமன்றத்தில் ஒப்படைத்து நிலையம் வந்து அறிக்கை செய்தேன். அதற்கான ஒப்புகை சீட்டு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் அது **அ.சா.ஆ– 18** ஆகும். அது சம்மந்தமாக பணிஒதுக்கப்பட்டு வழங்கப்பட்ட மேற்படி பணிக்கான கடவுச்சீட்டுக்கள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுபவை அவை **அ.சா.ஆ– 19, 20** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் எந்த பணியும் மேற்கொள்ளவில்லை என்றாலும், நான் பொய்யாக இந்த வழக்கில் சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct.

BREETHA M

Digitally signed by BREETHA M
Date: 2026.01.21 19:58:27 +0530

II Additional District & Sessions Judge,
Thoothukudi.